## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்தின் 2020 திசெம்பர் 31 இல்உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று,காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர்31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம்எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்து எழுகின்ற தாக்கங்களைத் தவிர்த்து, முகவர் நிலையத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயுஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,முகவர் நிலையம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது முகவர் நிலையத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

முகவர் நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் முகவர் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு முகவர் நிலையம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அவை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கப்படும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி முகவர் நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு முகவர் நிலையத்திக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக்

காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் முகவர் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- முகவர் நிலையத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- முகவர் நிலையத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- முகவர் நிலையம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- முகவர் நிலையத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை.

| இணங்கியிருக்காத நியமத்துக்கான தொடர்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மதியுரைச் சேவை வருமானத்திலிருந்து முன்னைய ஆண்டில் முகவர் நிலையம் கொள்வனவு செய்திருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதியான ரூபா 3,374,470 தொகை வெளிநாட்டு மானியக் கிடைப்பனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த தவறு மீளாய்வாண்டில் திருத்தப்பட்டிருந்த போதிலும்,இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இலுள்ள 53 ஆம் பிரிவின் பிரகாரம் முன்னைய ஆண்டின் தவறுகள் திருத்தப்பட்டமையுடன் தொடர்புடைய ஒப்பீட்டுத் தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதிக்கூற்றுகக்ளிற்கான குறிப்புக்களில் | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கையில் ஒப்பீட்டுத் தகவல்கள் சமர்ப்பிக்கப் படும். | முன்னைய ஆண்டுச் சீராக்கல்கள் உரிய வாறு சீராக்கப்பட்டு கணக்கீட்டு நியமத்தின் படி ஒப்பீட்டுத் தகவல் கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தரப்பட்டுள்ள செயற்திட்டங்கள், ஏனைய கடன்கொடுத்தோர், நடைபெற்று வரும் வேலைகள், கடன்பட்டோர், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் தொடர்புடைய முன்னைய ஆண்டுக்கான ஒப்பீட்டுத் தகவல்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இலுள்ள 48 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானங்கள் செலவுகளிற்கு எதிராக எதிரீடு செய்யப்படக் கூடாத போதிலும்,ரூபா 102,804 செலவினம் ஏனைய வருமானத்திலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்ததுடன், செயற்திட்டக் கடன்கொடுத்தோரிலுள்ள ரூபா 432,448 மொத்தத் தொகையான வரவு மீதியும் அவ்வாறு எதிரீடு செய்யப்பட்டிருந்தது. | இந்தத் தவறு ஏற்றுக் கொள்ளப்ப டுவதுடன் கணக்கீட்டுப் பொதி இவ்வாறு இனங்காண்கின்ற மையால் கணக்குகளில் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் இடம்பெறாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் படி,வருமா னங்களும் செலவுகளும் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்படாது தனித் தனியாக நிதிக்கூற்று க்களில் காண்பிக்கப்ப டுதல் வேண்டும். |
| (இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம், முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட ரூபா 99,663,068 கிரயமான மோட்டார் வாகனங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும், அந்த சொத்துக்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட டிருக்கவில்லை. அவ்வாறே அந்த சொத்துக்களின் பயன்தரும் பொருளாதார ஆயுட்காலம் சம்பந்தமான மதிப்பீட்டுத் தவறு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் படி திருத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட் ட சொத்துக்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் நியமத்தின் பிரகாரம் அந்த சொத்துக்களின் பயன்தரும் பொருளா தார ஆயுட்காலம் சம்பந்தமான மதிப்பீ டுத் தவறு திருத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ)இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 இலுள்ள 19 ஆம் பந்தியின் பிரகாரம், வழங்கப்பட்ட சேவைகளின் பூரணப்படுத் தல் மட்டத்திற்கு அமைய சேவைக் கொடுக்கல் வாங்கலுக்கான கட்டணம் இனங்காணப்படுவதாக நிதிக் கூற்றுக் களில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 93,848,483 மதியுரை வருமானம் செயற்திட்ட கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதன் மீது செய்யப்பட்ட செலவினம் செயற்திட்டக் கடன்கொடுத்தோரிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டங்களின் பூரணப்படுத்தல் மட்டத்திற்கேற்ப இனங்காணப்பட வேண்டிய வருமானம் கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்கள் கையேற்கப்பட்ட பின்னர் அவை பொறுப்பொன்றாக இனங்காணப்பட்டு உரிய வேலைகள் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் மாத்திரம் வருமானமாக இனங்காண்பதே நிறுவனத்தின் செயற்திட்டங்கள் தொடர்பிலான வழிமுறையாகும். | நியமத்தின் பிரகாரம் ஒப்பந்தச் சேவைகளின் பூரணப்படுத்தல் மட்டத்திற்கு அமையசேவை வருமானத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்தின் பெறுமானத்தேய்வுக் கொள்கையின் படி, வாகனங்கள் வருடாந்தம் 20 சதவீதத்தில் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும், 2016 மார்ச் 15 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 33,535,000 கிரயம் கொண்ட 05 மோட்டர் வாகனங்களிற்குரிய ரூபா 6,707,000 தொகையான பெறுமானத்தேய்வு ஏற்பாடு மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. இதனால், மீளாய் வாண்டிற்கான பற்றாக்குறை அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டுக்கான மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 1,676,750 ஆல் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இதனை எதிர்காலத்தில் திருத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்ப டும். | நிறுவனத்தின் பெறுமான த்தேய்வுக் கொள்கை யின் படி, வாகனங்கள் பெறுமானத்தேய்விடப்பட வேண்டுமென்பதுடன், அனைத்துச் சொத்துக்க ளும் கணக்கீடு செய்யப் படுதலும் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) முகவர் நிலையத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பனாபிடிய மற்றும் கப்பரதொட ஆகிய இடங்களிலுள்ள முறையே 3.416 ஹெக்டயார் மற்றும் 1.025 ஹெக்டயாா விஸ்தீரணமடைய 02 காணிகளின் உரித்தினை நிறுவனத்திற்கு கையேற்பதற்காக அந்தக் காணிகளின் பெறுமதியினை மதிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே ரெகவ மற்றும் கல்பிட்டி ஆகிய இடங்களிலுள்ள காணிகளின் பெறுமதி ரூபா 268,750,000 என்பதாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், அந்தக் காணிகளின் உரித்தினை கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கல்பிட்டி மற்றும் பனாபிடிய ஆகிய பிரதேசங்களிலுள்ள ஆய்வு மையங்களின் காணிகளை நீண்டகால குத்தகையின் அடிப்படையில் வழங்குவதற்கு பிரதேச செயலாளர் இணங்கியமைக்கு அமைய தற்போது அந்த இணக்கப்பாடு காணிகள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>கப்பரதொட காணியின் ஒரு பகுதியை கையேற்பதற்கான நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதுடன், அந்தப் பகுதி கடற்றொழில் அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டுள்ளமையால் அன்பளிப்பு சான்றிதழ் மூலம் எமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் எஞ்சிய பகுதியை கையேற்பதற்குத் தேவையான இழப்பீடு எம்மால் செலுத்தப்பட்டுள்ள துடன், அதுவும் முடியும் தருவாயில் உள்ளது. | காணிகளின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக் கைகளை மேற்கொண்டு அந்தக் காணிகளை விலைமதித்து நிதிக்கூற்றுக்களில் காட்டுவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ரெகவ காணியை நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கு வதற்கு பிரதேச செயலாளர் இணங்கியுள்ளார். | |
| (ஆ) 2014 ஆம் ஆண்டில் மானியமாக கிடைத்து கணக்கீடு செய்யப்பட்டிருக்காத ரூபா 9,390,000 பெறுமதியான மோட்டார் வாகனம் முன்னைய ஆண்டுச் சீராக்கமாக திறைசேரி மானியக் கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்த போதிலும், காலத்தேய்மானமானது அந்த வானகத்தின் திறைசேரி மானியக் கணக் கிற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டுக்கான அரசாங்க மானியம் அத்தொகையால் நிதிக்கூற்று க்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இதனை ஏற்றுக்கொள்வதுடன், 2021 இற்கான இறுதிக் கணக்குகளை தயாரிக்கையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மானியமாக கிடைத்து ள்ள சொத்துக்களிற்கான காலத்தேய்மானம் மீண் டும் அந்தச் சொத்துக்கள் கணக்கிற்கு சீராக்கப்ப டுதல் வேண்டும். |
| (இ) செயற்பாட்டு நடவடிக்கைளினால் எழுந்திருந்த ரூபா 2,500,157 ஆன காசுப் பாய்ச்சலுக்கு தாக்கம் ஏற்படுத்தியிருக்காத முன்னைய ஆண்டுச் சீராக்கல், காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,230,389 குறைவாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே கட்டிட நிர்மாண முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 6,351,443 தொகை தொழிற்படு மூலதன மாற்றத்தின் கீழும் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழும் இரு தடவைகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>இது சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்படு தல் வேண்டும். |
| (ஈ) நிலையான சொத்துக்களின் வருடாந்த பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 110,908,171 என்பதாக கணக்கீடு செய்யப்பட் டிருந்த போதிலும், சொத்துக்களின் வகைப்படு த்தலின் படியான பெறுமானத்தேய்வுக் கணிப்பீட்டு விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை காரணமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமானத்தேய்வின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை. அவ்வாறே, நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 8,928,589 தொகையான 03 நடைபெற்று வரும் வேலைகளிற்குரிய ஆதாரப்படுத்தல் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை காரணமாக அந்த மீதியின் சரியான தன்மையை | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கோரப்பட்டிருந்த படிவத்திற்கு அமைய பெறுமானத் தேய்வு கணப்பீட்டு படிவத்தை வழங்குவதற்கு முடியாது போனமை ஏற்றுக் கொள்ளப்படு வதுடன், கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் போதிய கால அவகாசம் வழங்கப்படா மையே அதற்குப் பிரதான காரணமாகும்.<br><br>நடைபெற்றுவரும் வேலை<br><br>படகொன்றை நிர்மாணித்தல் ரூபா 2,902,938: இந்தக் கோவை இலஞ்ச மற்றும் ஊழல்கள் புலனாய்வு ஆணைக் குழுவிற்கு | கணக்காய்வாளர்களால் கோரப்பட்ட தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப் பிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>கல்பிட்டி சுசுஊ எல்லைச் சுவர் நிர்மாணம் ரூபா 2,124,979 மற்றும் ஆய்வுகூடத் தொகுதியை நிர்மாணித்தல் ரூபா 3,900,672: குறித்த கோவைகள் கணக்காய் விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |
| (உ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த 09 சொத்து விடயங்களின் பெறுமதிகளுக்கும் அதற்கு நேரொத்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதிகளுக்கும் இடையே ரூபா 16,263,138 வேறுபாடு அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வேறுபாடுகளிற்கான காரணங்கள் கணக்கா ய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | கட்டிடங்கள் மீதி ரூபா 768,985 – 2017 ஆம் ஆண்டில் ஆரம்ப மீதியை பதிவுசெய்கையில் ரூபா 595,000 தொகை அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் சீராக்கப்பட்ட ரூபா 173,985 தொகை கண்டறியப்பட வேண்டியுள்ளது.<br><br>• 2016 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட ரூபா 1,720,300 தொகை சீராக்கப்பட்டு சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டது ன்,ரூபா 119,545 தொகையை கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.<br><br>• மீன் தொட்டிகளின் கீழ் ரூபா 2,153,399 தொகையும் படகுகள் மற்றும் வள்ளங்களின் கீழ் ரூபா 433,080 தொகையும் கணனி வன்பாகங்களின் கீழ் ரூபா 2,206,499 தொகையும் சொத்துக்கள் பதிவேட்டில் திருத்தப்பட்டுள்ளன. | வேறுபாடுகள் கண்டறி யப்பட்டு திருத்தப்படுதல் வேண்டும். |
| (ஊ) நிறுவனத்தின் மதியுரைச் சேவை வருமானத்திலிருந்து சுய வருமானமருவத்துவத் திட்ட (முறெ ஐஒெ_ழஅந ஆநனளைஉயட கரனெ ) ளூஉாநஅந) நிதியக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த 5 சதவீதத் தொகையான ரூபா 2,630,159 இனை நிதியமொன்றாக நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்குப் பதிலாக ஏனைய கடன்கொடுத்தோரின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கடன்கொடுத்தோரின் கீழ் குறிப்பிட ப்பட்டுள்ள போதிலும், மருத்துவ நிதியம் என்ற பெயரில் செலவு வைப்பதற்கு எதிர்வரும் காலத் தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியக் கணக்குகள், நிதியங்கள் என நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்ப டுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுத் திறைசேரிக்குத் தீர்க்கப்பட வேண்டிய ரூபா 39,930,000 தொகை யான நியதிச்சட்டக் கொடுப்பனவை-வு-2 ஆண்டுகளைக் கடந்திருந்த போதிலும், தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவி ல்லை. | முன்னைய ஆண்டுகளில் போதிய உழைப்புக் காணப்படாமையால் இதனை தீர்ப்பது தாமதமடைந்துள்ளது. | நியதிச்சட்ட கொடுப்பனவு என்பதால் திறைசேரியுடன் கலந்தாலோசித்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் (3)384 | கிடைக்கப்பெறுகின்ற அனைத்துக் காசோலைகளும் தொடர்பில் முறையான பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதனை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்த பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 395 | முன்னைய மாதத்திற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தயாரிக்கப்பட்டு, அதனுடன் சம்பந்தப்பட்ட கொடுப்பனவு உத்தியோகத்தரால் சான்றழிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பரீட்சித்தலுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், முகவர் நிலையத்தால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை உரியவாறு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2022 முதல் சமாப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம், நாளதுவரையாக தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (iii)நிதிப்பிரமாணம்570 மற்றும் 571 | 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட ரூபா 1,312,000 தொகையான கேள்விப்பத்திர வைப்புக்களை வருமா | மீதிக்கான பின்னிணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | னத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய30.:.2016ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) 3.1 ஆம் பிரிவு | அரசாங்க நிறுவனங்களில் காணப்படுகின்ற வாகனங்களிற்காக எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், முகவர் நிலையத்திற்குச் சொந்தமான 25 வாகனங்களிற்காக எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் கடமைக்காக அவ்வப்போது வருகை தந்திருந்தமையால் எரிபொருள் நுகர்வுப் பரிசோதனையை நடாத்த முடியாமல் போயிருந்தது. | சுற்றறிக்கையின் படி எரிபொருள் நுகர்வுப் பரிசோதனையை நடாத்துவதற்கு நவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 3.3 ஆம் பிரிவு | வாகனத்தின் பதிவு இலக்கம், நுகரப்படும் லீற்றர் அளவு, பயணித்த தூரம், லீற்றர் ஒன்றுக்கு பயணித்த தூரம் மற்றும் திருத்தல் செலவினம் ஆகியவற்றை உள்ளடக்கிய வாகனப் பதிவேடுகள் பேணப் பட்டிருக்கவில்லை. | இணங்க முடியாதுள்ளது. வாகனங்களிற்கான சகல செலவுகள், பயணித்த தூரம், லீற்றர் ஒன்றுக்கு பயணித்த தூரம் ஆகிய தரவுகள் பயன்படுத்தப்பட்டு காலாண்டு ரீதியாக தயாரிக்கப்பட்ட அறிக்கை உள்ள கக் கணக்காய்விற்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் குறித்த தரவுகள் கனணிமயப்படுத்தப்பட்டு அதற்கமைய அறிக்கை தயாரிக் கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வானகலொக் புத்தகங்கள் பேணப்படுதல் வேண்டும். |
| (iii)4.3 ஆம் பிரிவு | வாகனங்களை திருத்தம் செய்கையில் வாகனத்திலிருந்து கழற்றி அகற்றப்பட்ட உதிரிப்பாகங்கள் குறித்த சிட்டைகளுடன் நிறுவனத்தின் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சிட்டைகளுடன் சேர்த்து உதிரிப்பாகங்கள் களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப் பட்டிருக்கவில்லை. | தற்போது நாரா நிறுவனத்தின் அனைத்து வாகனங்களும் (மோட்டார் சைக்கில்களை தவர்த்து) அந்த வாகனங்களின் முகவர் நிறுவனங்களைக் கொண்டே திருத்தப்படுகின்றன. | சுற்றறிக்கையின் படி,கழற்றி அகற்றப்படுகின்ற உதிரிப்பாகங்களை நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) (ஐஏ) 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல் வள மற்றும் அபிவிருத்தி முகவர் நிலைய சட்டத்தின் 34 ஆம் பிரிவு. | முகவர் நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கற்கைகள், ஆய்வுகள், பரீட்சார்த்தங்கள் மற்றும் ஏனைய புலனாய்வுகள், ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் தொடர்பில் பெற்றுக்கொள்கின்ற தரவுகள், அறிக்கைகள் மற்றும் விபரங்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பணிப்பாளர் நாயகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. | மத்தியமயப்படுத்திய தரவுத்தளமொன்று இதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. தரவுகளின் பரிமாற்றத்திற்கான கொள்கையொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆய்வு அறிக்கைகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | கனணியமப்படுத்திய தரவுகளிற்கு மேலதிகமாக சட்டத்தின் படி கணனி மயப்படுத்திய கோவையினை காண்பிக்கின்ற பொழிப்புப் பதிவேடொன்று பேணப்படுதல் வேண்டும். |
| (ஈ) (ஏ)1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல் வள மற்றும் அபிவிருத்தி முகவர் நிலைய சட்டம் மற்றும் 1996 இன் 32 ஆம் இலக்க திருத்திய சட்டத்தின் 18 ஆம் பிரிவு. | விஞ்ஞான ரீதியான அல்லது தொழில்நுட்ப ரீதியான குழுவொன்று நியமிக்க வேண்டிய போதிலும், தற்போது செயற்படாத நிலையிலுள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்காக புதிய உறுப்பினர்கள் நியமிக்கப் பட்டிருக்கவில்லை. | இந்தக் குழு 2020 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டதுடன், செயற்திட்ட மீளாய்வுகள் இந்தக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. | சட்டத்தின் படி குழுவுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,852,531பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 16,444,930ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 10,592,399 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் பராமரித்தல் செலவினம் ரூபா 37 மில்லியனாலும் ஆராய்ச்சி அபிவிருத்திச் செலவினம் ரூபா 35 மில்லியனாலும் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 87 மில்லியனாலும் குறைவடைந்திருந்தமை இதற்கான பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயற்திட்டக் கடன்கொடுத்தோர் மீதிப் பட்டியலில் உள்ளடங்கியிருந்த ரூபா 20,420,827 பெறுமதியான 27 செயற்திட்டங்கள் 4 – 7 ஆண்டு காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்ட போதிலும், அந்தச் | செயற்திட்ட இல. 1 முடிவடைந்துள்ளதுடன் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. பட்டியலிலுள்ள 08 மற்றும் 09 ஆம் இலக்க செயற்திட்டங்கள் இடம்பெற்று | செயற்பாடற்ற செயற்திட்டங்கள் குறித்து ஆய்ந்தறிந்து உரிய பொறுப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்திட்டங்கள் குறித்து ஆய்ந்தறிந்து தொடர்புடைய பொறுப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, செயற்திட்டங்களின் பட்டோலை மற்றும் கேள்விப்பத்திர வைப்புப் பட்டோலையின் படி ரூபா 70,554,695 பெறுமதியான 54 செயற்திட்டங்களிற்கான செயற்திட்ட அறிக்கைகள் குறித்த சேவைநாடுனருக்கு உரிய விதத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறித்து கணக்காய்வில் உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை. | வருவதுடன், அவை இந்த பட்டியலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். 12 ஆம் இலக்க செயற்திட்டத்திற்குரிய நிதி அமைச்சிற்கு மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது. 14 முதல் 26 ஆம் இலக்கம் வரையான செயற்திட்டங்கள் செயற்பாடற்ற செயற்திட்டங்களாக இனங்காணப்பட்டு பதிவழிப்புச் செய்வதற்காக ஆளுகைக் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும்,கலந்துரையாடப்படா மையால், மீண்டும் சமர்ப்பிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ)06 மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான சாத்தியவள ஆய்வு அறிக்கையினை தயாரிப்பதற்காக வெளிவாரி நிறுவனமொன்றுக்கு ரூபா 1,612,898மிகையாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதனை அறவிடுவதற்கு 07 ஆண்டுகளிற்கும் மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன்,மேலதிகமாகச் செலுத்தியமைக்கு பொறுப்பான உத்தியோகத்தரை இனங்கண்டு அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை. | இந்த தொகையை அறவிடுதல் தொடர்பில் அமைச்சரவையின் மூலம் இதனை பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறே இது தொடர்பில் தொடர்ந்தும் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும். | பொறுப்பான உத்தி யோகத்தர்கரளை கண்டறிந்து அவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) உத்தியோகத்தர்களால் சேமித்து வைக்கப்பட்டிருந்த மருத்துவ விடுமுறைகளிற்காக ரூபா 8,338,757 தொகை மீளாய்வாண்டில் சுய உழைப்பு வருமானத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன், இந்தக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டிருந்த போதிலும், திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது நீண்டகாலமாக ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக சுய உழைப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவாகும். | படிகளை செலுத்து வதற்கு முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஈ) ரூபா 40,269,931 தொகையான மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்களுடன் தொடர்புடைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானியங்கள் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டில் கணிப்பிடப்பட்டிருந்த காலத்தேய்மானத்தின் சரியான | எதிர்காலத்தில் திருத்தப்படும். | சரியான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |

தன்மையை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

### 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடலோர நீரில் மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக மீன்களை ஒன்றுசேர்க்கும் கொட்டில்கள் (குயுனுள) மற்றும் மீன் வளத்தை மேம்படுத்தும் கொட்டில்கள் (குநுனுள) களை நிறுவும் நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் முழுமையாக இடைநிறுத்தப்பட்டமையால் இந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 3.90 மில்லியன் தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது. | 2018 ஆம் ஆண்டில் 50 குயுனு கள் சின்னப்பாடுவ மற்றும் வெலிகம பிரதேசங்களில் நிறுவப்பட்டு அது தொடர்பான பின்தொடர்தல்கள் 3 வுசயைட குளைாலைெ சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டு தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டு பரிந்துரை கள் வழங்கப்பட்டுள்ளன. வைப்பத ற்கு முடியுமான அளவு குயுனுள கள் வெலிகம,ரூமஸ்ஸல, பொல்ஹேன மற்றும் உனவடுன பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ளன. கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பில் பின்தொடர்தல்களை மேற்கொள்வதற்குத் தேவையான மனத வளம் காணப்படாமை காரணமாக பௌதீக செயன்முன்னேற்றம் எதிர்பார்த்த அளவில் காணப்படாத போதிலும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தேவையான இலக்குகள் அடையப்ப ட்டுள்ளமையால் அந்த ஆய்வு அறிக்கைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் மீன் வளத்தினை அதகரிப்பதற்கான நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகள் அமை ச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகையால் இவ்வாறு செலவிடப்பட்டு ள்ள தொகை பயனற்ற செலவினமாக கருதப்பட முடியாது. | செயற்திட்டங்களிற்காக செலவிடப்பட்ட தொகை கள் பயனற்ற செலவின மாவதை தடுப்பதற்கு மாற்று வழிகளை கருத்திற்கொண்டு செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) முகவர் நிலையத்தின் குறிக் கோள்களிலிருந்து விலகி ரூபா 15,245,000 செலவிடப்பட்டு 2014 ஆம் ஆண்டில் மீன் விற்பனை நிலையமொன்று பேருவல இல் அமைந்துள்ள முகவர் நிலையத்திற்கு முறையாக கையேற்கப்படாத காணி யில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீன் விற்பனை நிலையம் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | பிரதேசத்திலுள்ள மீன் வியாபாரிகள் இந்த விற்பனை நிலையங்களில் மீன் வியாபாரத்தை மேற்கொள்ள விரும்பாமையால் விளைவற்று காணப்படுகின்றன. | குறிக்கோள்களிற்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென்ப துடன் சொத்துக்களிலி ருந்து உச்ச பயனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 02 படகுகளை உற்பத்தி செய்வதற்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 4,493,052செலவிடப்பட்டு உயர் வலு கொண்ட இரண்டு என்ஜின்கள் கொள்வனவு செய்யப்பட்டு 02 படகுகளையும் உற்பத்தி செய்கின்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 2,902,938மேலதிகமாக செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த இரண்டு என்ஜின்கள் மற்றும் உற்பத்திசெய்து முடிக்கப்படாத 02 படகுகள் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தன. | ஆமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் பல கட்டங்களில் கலந்துரையாடப்பட்ட பின்னர் தீர்மானிக்கப்பட்டதன் படி வேறு அரசாங்க நிறுவனமொன்றுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவினமாவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பணிப்பாளர் நிதி பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி அடிப்படை தகைமைகள் பூரணப்படுத்தப்படாதுள்ள ஒருவர் பணிப்பாளர் நிதி பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்டு 2017 மே முதல் 2020 திசெம்பர் 31 வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 7,666,842 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் முன்னைய 02 ஆண்டுகளின் போது சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதனைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான நேர்முகப் பரீட்சை சபையொன்றால் தெரிவுசெய்யப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் படி பணிப்பாளர் நிதி பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டதுடன் அவரின் தகைமைகள் தொடர்பில் காணப்படுகின்ற வேறுபாட்டை தகுதிகாண் காலத்தில் சரிசெய்வதற்கு தகுதிகாண் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. அவர் அது தொடர்பில் செயற்பட்டு வருகின்றார். கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஆலோசனையின் படி நடவடிக்கை எடுக்கப்படின், நிறுவனம் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும்,இந்த ஆட்சேர்ப்பு தொடர்பில் ஊழி-ழ-ல் மற்றும் இலஞ்ச ஆணைக்குழு இனாலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையால் அதன் மூலம் கிடைக்கின்ற பெறுபேறுகள் மற்றும் தாபனவிதிக் கோவையின் ஐஐ ஆம் அத்தியாயத்தின் 11.9 ஆம் உப பிரிவின் படி எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறியத்தரப்படும். | ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் ஆட்சேர்க்கப்படுதல் வேண்டும். |